2018

No. of Printed Pages : 4

2018

201400 **8051**

*Register Number* | | | | | | | |

**Second Year**

# இந்தியக் கல்வி முறை

# INDIAN EDUCATION SYSTEM

(Tamil Version)

நேரம் : 3 மணி

உச்ச மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

**I.** **அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**15x2=30**

1. சமணப் பள்ளிகள் பற்றி கல்வெட்டு ஆதாரங்கள் கூறுபவற்றைக் குறிப்பிடுக.

2. 'கல்வி' பற்றி ஸ்ரீ அரவிந்தரின் கூற்றை வரையறுக்கவும்.

3. கல்வியின் தனிமனித நோக்கத்தினை குறிப்பிடுக.

4. மாணவர்கள் பிறரோடு சேர்ந்து வாழும் திறனைப் பெறுவதற்கான உத்திகள் இரண்டினைக் குறிப்பிடுக.

5. அறிவுப் பொருளாதாரத்தினால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

6. 'கல்வியால் சமூக நிலைப்பெயர்வு அடைய முடியும்' என்ற கூற்றிற்கு தகுந்த எடுத்துக்காட்டு தருக.

[ Turn over

7. சமுதாயக் கண்காணிப்பை மேம்படுத்தும் செயல்களாக நீவீர் கருதுவதைக் கூறுக.

8. பொருள் சார்ந்த பண்பாடு, பொருள் சாரா பண்பாடு வேறுபடுத்துக.

9. குழந்தைகள் உரிமைக்காக மேற்கொள்ளும் செயல்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

10. மாணவர் சேர்க்கை சதவீதம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது ?

11. நலத்துறைப் பள்ளிகள் - குறிப்பு வரைக.

12. பெண்களுக்கு அரசு வழங்கியுள்ள காப்புரிமைச் சட்டங்கள் யாவை ?

13. NCERT, NCTE, IASE, RIE - என்பதன் விரிவாக்கத்தைக் கூறுக.

14. பள்ளி மேலாண்மையின் முக்கியக் கூறுகளை பட்டியலிடுக.

15. ஆசிரியர் பணியின் உறுதிப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

## பகுதி - ஆ

**II.** **எவையேனும் பத்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் **200** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x4=40**

16. சர் சார்லஸ் உட் என்பாரின் கல்வி அறிக்கையின் பரிந்துரைகளை ஆய்க.

17. சுவாமி விவேகானந்தரின் கல்வி அணுகுமுறைகளை விளக்குக.

18. பொருளாதார வளர்ச்சியில் கல்வியின் பங்கு யாது ?

19. கல்வியின் நான்கு தூண்கள் யாவை ? விளக்குக.

20. கிராமக் கல்விக் குழுவின் பணிகளை விளக்குக.

21. பள்ளியில் பண்பாட்டு ஒற்றுமையை வளர்க்கும் செயல்பாடுகளை பட்டியலிடுக.

22. எவையேனும் எட்டு அடிப்படை உரிமைகளை அதன் சட்டப்பிரிவுகளின்படி எழுதுக.

23. அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் சிறப்பு அம்சங்களை விளக்குக.

24. செயலூக்கக் கற்றல் முறையின் (ALM) வழிமுறைகளை ஆய்க.

25. கலைத்திட்டம் மற்றும் பாடப்புத்தக மறுசீரமைப்பு குறித்து நீவீர் கருதுவது யாது ?

26. "ஆசிரியர் ஓர் செயல் ஆராய்ச்சியாளர்" - இக்கூற்றை விளக்குக.

27. பள்ளியின் முழுத்தர மேலாண்மைக்கு காரணிகளாக விளங்குபவற்றை விவரிக்கவும்.

## பகுதி - இ

III. பின்வரும் வினாக்களுக்கு 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். 3x10=30

28. (அ) வேத கால கல்வியில் கீழ்க்காணும் தலைப்புகளை விளக்குக.

(i) ஆசிரியர் மாணவர் உறவு

(ii) வேத கால பாடப் பொருள்

(iii) குருவின் தகுதிகள்

(iv) குருகுலக் கல்வி

(v) இதிகாச காலக் கல்வி

**அல்லது**

(ஆ) கல்வியின் நோக்கங்களைத் தீர்மானிக்கும் காரணிகளை விவரிக்கவும்.

[ Turn over

29. (அ) அமைதிக் கல்விக்கான கலைத்திட்டம் மற்றும் கற்பித்தல் முறைகளை தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) கீழ்க்கண்ட தலைப்புகளை விளக்குக.

(i) புதிய கல்விக் கொள்கை - 1986

(ii) மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம்

(iii) வட்டார வளமையம்

(iv) பள்ளித் தொகுப்பு கருத்தாய்வு மையம்

(v) நலிவடைந்த குழந்தைகளுக்கான கல்வி

30. (அ) ஆசிரியரின் தலைமைப் பண்புகளாக நீவீர் கருதுவதை தொகுத்துக் கூறுக.

**அல்லது**

(ஆ) பள்ளி மேலாண்மையின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை ஆய்க.

-o0o-